செய்தி வெளியீடு எண்–746 நாள்–17.11.2007

# செய்தி வெளியீடு

## ஈரோடு திருப்பூர் நகராட்சிகளை மாநகராட்சிகளாக உயர்த்தி இரண்டு அவசரச் சட்டங்கள்

தந்தை பெரியார் அவர்கள் ஈரோடு நகராட்சியின் தலைவராகப் பதவிப் பொறுப்பை ஏற்றிருந்தபோது 1917–ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 17–ஆம் நாள் ஈரோடு நகராட்சியில் பெரிய சேமூர், வீரப்பன்சத்திரம் போன்ற பகுதிகளும் ஈரோடு நகரத்தோடு இணைக்கப்பட்டு விரிவாக்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். தந்தை பெரியார் கண்ட அந்தக் கனவை நிறைவேற்றுகின்ற வகையில், ஈரோடு நகராட்சியை விரிவுபடுத்த வேண்டுமென்று பெரியார் அவர்கள் விரும்பியதற்கேற்ப ஈரோடு நகராட்சி மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 15.9.2007 அன்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி ஈரோடு நகராட்சி அதன் தற்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி 1.1.2008 முதல் ஈரோடு மாநகராட்சியாக நிலை உயர்த்தப்படுகிறது.

ஈரோடு நகராட்சியின் தற்போதைய பகுதி அப்படியே மாநகராட்சியாக அமைக்கப்பட்டாலும், தந்தை பெரியார் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற வகையில் பெரிய சேமூர், வீரப்பன்சத்திரம், காசிபாளையம், சூரம்பட்டி ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளும், பி.பெ.அக்ரஉறாரம், சூரியம்பாளையம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளும், திண்டல், கங்காபுரம், எல்லப்பாளையம், வில்லரசம்பட்டி, முத்தம்பாளையம் ஆகிய ஊராட்சிப் பகுதிகளும் ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும். இவ்வாறு விரிவுபடுத்தப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் இந்த விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி செயல்படத் தொடங்கும்.

ஆசிய அளவில் பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் நகரம் முன்னணி இடத்தை வகிக்கின்றது. இந்நகரின் பிரமிக்கத்தக்க தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செம்மையான முறையில் அளிக்கும் வகையில் திருப்பூர் நகராட்சி மாநகராட்சியாக அமைக்கப்படுகிறது. ஈரோடு போன்று திருப்பூர் நகராட்சியும் தற்போதைய எல்லைகளுடன் 1.1.2008 முதல் மாநகராட்சியாக அமைக்கப்படுகிறது. 15 வேலம்பாளையம், நல்லூர் ஆகிய மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளும், செட்டிபாளையம், மண்ணரை, தொட்டிபாளையம், ஆண்டிபாளையம், வீரபாண்டி, முருகம்பாளையம், நெருப்பெரிச்சல், முத்தனம்பாளையம் ஆகிய கிராம ஊராட்சிப் பகுதிகளும் திருப்பூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டு விரிவுபடுத்தப்படும். இவ்வாறு விரிவுபடுத்தப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் இந்த விரிவுபடுத்தப்பட்ட மாநகராட்சி செயல்படத் தொடங்கும்.

ஈரோடு மற்றும் திருப்பூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக நிலை உயர்த்துவதற்கெனத் தனித்தனியாக இரண்டு அவசரச்சட்டங்கள் இன்று பிறப்பிக்கப்பட்டுள்ளன.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.